உ

ஸ்ரீ சிந்தாத்ரி மஹா கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றத்
தலபுராணச் சுருக்கம்.

திருஞான சம்பந்த மூர்த்தி சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், பதிக மூல உரையுடனும்,

ஸ்ரீ வேதகிரீஸ்வரர் அஷ்டகமும்,

சிதம்பர சுவாமிகளியற்றிய இலிங்கப்பதிகமும், மலைமருந்து பதிகமும், பட்டினத்தடிகள் பதிகமுரையுடனும், அருணகிரிநாதர் திருப்புகழும், ஸ்ரீ திருபுரசுந்தரி யென்வழங்கும் பாமாலையும்,

ஸ்ரீமான்

தி. வரகவி கன்னியப்ப முதலியாரவர்களாலும்,

தி. வேதாசல குருக்களவர்களாலும்,

பார்வையிடப்பட்டு,

திருக்கழுக்குன்றம்

பரிமள அண்டு கம்பெனி

சொந்தக்காரரவர்களால்,

சென்னை அரண்மனைக்காரன் தெரு

கார்லேண்டு அச்சுக்கூடத்தில் பதிப்பித்தது.

5th Edition) 1931. (விலை அணா 0-1-0

[*Rights Reserved.*]

உ

ஸ்ரீ வேதகிரீஸ்வரர் அஷ்டகமும்

(1) வ்யோமா நிலர்நல ஜலாசல சந்திரசூர்ய
சைதன்ய கல்பிதசரீர விராஜிதாய !
ருக்வாதி வேதகிரிஸ்ருங்க நிகேதநாய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமசிவாய !!

(2) கற்பூர சங்க தவளாக்ருதி சந்த்ரகாந்தா
மூக்தாபல ஸ்படிகஸன்னிப விக்ரஹாய !
கஸ்தூரி குங்கும ஹிமாம்புவி லேபநாய
ஸ்ரீருத்ரகோடி நிலயாய நமசிவாய !!

(3) ஸௌந்தர்யநாயகி முகாம்புஜ பிருங்கபூத
சந்த்ரார்க்க வன்ஹிநிலயாய ஸதாசிவாய !
அணிமாதி நாயகருணாம்ருத ஸாகராய
ஸ்ரீ ருத்ரகோடிநிலயாய நமசிவாய !!

(4) கங்கா ஜலாக்ர நிலயாய கலாமயாய
காமாந்தக த்ரிபுரக்த விலபநாய !
கங்காதராய கருடத்வஜ ஸேவிதாய
ஸ்ரீ ருத்ர கோடி நிலயாய நமசிவாய !!

(5) கிருத்ராசலேந்த்ர நிலயாய கிரீஸ்வராய
தத்வாதி வித்தஸு—ரபூஜிதா வந்திதாய !
வித்தாதி யோக புருஷாய திகம்பராய
ஸ்ரீருத்ர கோடிநிலயாய நமசிவாய !!

(6) பஞ்சாக்ஷராய பவ்ஸாகர தரணாய
பஞ்சாஸ்ய வர்ம வசநாய பராத்பராய !
பஞ்சாக்ஷராய நிகமசல நாயகாய
ஸ்ரீருத்ர கோடி நிலயாய நமசிவாய !!

(7) வேதாந்த மூக்ய விபவாய கிரீஸ்வராய
வேதாந்த வேத்ய ஸரஸாய விசக்ஷணாய !
வேதாய வேத துரகாய விஷாசனாய
ஸ்ரீருத்ர கோடி நிலயாய நமசிவாய !!

(8) ஆதார சக்தி குடிலாஸந பஞ்சகாய
பிரம்ஹாண்ட கல்பித கமலாய விக்ரஹாய !
ப்ராஸாத ஷோடச கமலாய விஸ்சவ மூர்த்தெ
ஸ்ரீ ருத்ரா கோடி நிலயாய நமசிவாய !!

ஸ்ரீ வேதகிரீஸ்வர அஷ்டக சம்பூர்ணம்.

இந்த அஷ்டகத்தைப் படிக்கிறவர்களும் கேட்கிறவர்களும் இகத்தில் சர்வ சௌக்கியத்தையும் அடைந்து பரத்தில் முக்தியையும் அடைவார்கள்.

சிவமயம்.

திருக்கழுக்குன்றத்

தலபுராணச் சுருக்கம்.

ருத்ரகோடி கிரேச்ருங்கம் தூரேத்ருஷ்ட்வா சிவாத்மகம்
ஸம்ஸார பயநிர்முக்த சிவசாயுஜ்ய மாப்நுயாத்
காமாத் க்ரோதாச்சலோ பாச்ச அஜ்ஞாநாத் ஞானதோபிவா
ருத்ரகோட்யாம் ஏகராத்ரம் உஷித்வாருத்ரதாம் வ்ரஜெத.

சிவஸ்வரூபமாயுள்ள ருத்ரகோடி என்று விளங்கும் திருமலையின் உச்சியை வெகுதூரத்திலிருந்து தரிசித்தவர்களாயினும், அவர் ஜனன மரண துக்கத்தில் நின்றும் நிவர்த்தியடைந்து சிவசாயுஜ்யத்தை அடைகிறார்கள்.

ஸ்திரீயினிடத்திலுள்ள ஆசையினாலாவது, கோபத்தினாலாவது, வஸ்து பிரீதியினாலாவது, அஞ்ஞானத்தினாலாவது, ஞானத்தினாலாவது, ஓரிரவு இந்த ருத்ரகோடி க்ஷேத்திரத்தில் வசிக்கிறவன் ருத்ர பதம் அடைகிறான்.

காருடச் சுருக்கம்.

சூதபுராணிகர் நைமிசாரண்யவாசிகளை நோக்கிக் கூறுகிறார்.

திருக்கயிலாயத்தில் எழுந்தருளியிருக்கின்ற சிவபிரானை வணங்கு நிமித்தம் விஷ்ணுதேவர் கருடவாகனமீது ஆரோகணித்துத் திருக் கயிலாயச் சாரலில் இறங்கி முதற்கோபுர வாயிலில் கருடபகவானை நிறுத்தித் திருநந்திதேவர் அநுமதிபெற்று உள்ளேபோய் ஸ்ரீ கயிலாய பதியைத் தரிசித்தனர். முதற்கோபுர வாயிலிலிருந்த கருடன் வழக்கப்படி திருநந்திதேவரைப் பணியாமல் அகங்கரித்திருப்பதை நந்தியம் பெருமானறிந்து கருடதேவரைப் பார்க்க, இரந்துண்பவன் வாகனமான உன்கோபம் யாதுசெய்யுமென்று கருடபகவான்கூற, இச்சிவநிந்தையைக்கேட்ட நந்தியம்பெருமான் பெருங்கோபங் கொண்டனர். புவனங்களியாவும் அதிர்ந்தன. இனி யென்ன விளையுமோவென்று தேவர் நடுங்கினார்கள். சிவநிந்தையால் கருடன் யாதனை தேகத்தோடு பெருந்துயருற, இப்போதே தண்டிக்கவேண்டுமென்று நந்திதேவர் நினைந்து பெருமூச்சு விட்டனர். நாசிவழியாய் வந்த சுவாசமாகிய பிரசண்ட மாருதமானது கருடதேவரை நூறுயோசனைதூரம் உருட்டிக் கொண்டு போனது. உள்ளே வாங்கும் சுவாசத்தால் நந்திதேவர் நாசி வரையில் உருண்டுருண்டு சரீரம் நெருங்கி பெருந்துயரடைந்து மகா விஷ்ணுவைக் குறித்துக் கருடன் முறையிட்டனன். விஷ்ணுமூர்த்தி யறிந்து கருடனை உபாதிசெய்யாமல் விடும்படி சிவபிரானுடைய அநுமதி பெற்றுவந்த நந்திதேவருக்குத் தெரிவித்தனர். சிவநிந்தை செய்த

இத்தேகத்தைவைக்கலாகாதென்று கருடன்மீது மறுபடியுங்கோபிக்க; விஷ்ணுதேவர் சிவசந்நிதியடைந்து கருடனை உபாதிசெய்கின்றன ரென்று சொல்லச் சிவபெருமான் நந்திதேவரை வரவழைத்து நமது கட்டளைக்கு மேலுங் கோபங்கொள்ளலாமோவென்று திருவாய்மலர, சிவவாக்கியத்தை ஆலோசியாமல் தனக்குக் கோபம் வந்ததைத் திரு நந்திதேவர் நினைந்து சரீரம்நடுங்கி, அடியேன் தேவரீர் வாக்கியத்தைத் தடுத்த அபசாரத்தை மன்னித்தருள வேண்டுமென்று பிரார்த்தித் தனர். கருடன் புபிதேவர் சிவானுக்கிரகத்தால் சரீர சௌக்ய மடைந்தனர்.

வேதகிரிச் சுருக்கம்.

சிவவாக்கியத்தைத் தடுத்த நந்திதேவர் பணிந்து அப்பாபம் நீங்க அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க சிவபெருமான் திருவுளமிரங்கி வேதகிரியென்னுமோர் ஸ்தலமிருக்கின்றது. பூர்வம் வேதங்கள் நம்மைப் பூசித்து ஆறு அங்கங்களுடன் ஒன்றுசேர்ந்து நமது திருவடியின்கீழ் நிலைத்திருக்கவேண்டுமென்று பிரார்த்திக்க, பூலோகத்தில் ஒருகிரிவடிவமாக நிற்பீர்களானல் அம்மலையினுச்சியில் நாம் ஒரு சிவலிங்க வடிவமாகத் திருவுருக்கொள்வோம்; அதனுல் உங்களுக்கு வேதகிரியென்று பெயருண்டாகுமென்று கட்டளையிட் டோம். அவ்வண்ணமே இருக்குவேதம் வேராகவும்; யசுர்வேதம் மத்தியாகவும்; சாமவேதம் அடியாகவும்; அதர்வணவேதம் சிகரமா கவும்; சந்தையென்பது பொன், வெள்ளி, இரும்பு, செம்பு, ஈயம், வெண்கலம், தாரா என்னும் தாதுக்களாகவும், தற்பம் அம்மலைக்குக் குகைகளாகவும் மீமாம்சை தாழ்வறையாகவும், உபநிடதம் விருக்ஷங்க ளாகவும், நிருத்தகம் அருவிகளாகவும், சோதிடம் மணிகளாகவும், சிவா கமம் நாற்புறத்திலுமுள்ள சாரல்களாகவும் விளங்குவனவாம். ஸ்தலங் களுக்குள் அது விசேஷமாகும் என்று நந்திதேவருக்குச் சிவபெரு மான் திருவாய்மலர்ந்தருளினர்.

உருத்திரகோடிச் சுருக்கம்.

இவ்வாறு கட்டளையிட்ட பரமசிவத்தை நந்தியம்பெருமான் வணங்கி, வேதகிரித் தலத்தில் கோடிருத்திரர்கள் பூசைசெய்த கார ணத்தையும் அடியேனுக்குத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பணிந்து கேட்கப் பரமசிவன் கட்டளையிடுகின்ருர். பூர்வம் உலகத்தி னிடத்து அநேக இராட்சதர்கள் பரவித் துன்பஞ்செய்து கொண் டிருந்தார்கள். அவர்களை நாசப்படுத்தும்படி நமது திருமேனியில் கோடி ருத்திரர்களை உண்டாக்கினேம். அவர்கள் நமக்குச் சமான மான வல்லமையுடையவர்கள். அவுணர்களை நாசஞ்செய்து உலகங் களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணுவீர்களென்று தெரிவித்தோம். அசுரர்களைக் கொன்று உலகங்களுக்கு க்ஷேமம் உண்டுபண்ணி, அக்கோடி ருத்திரர்களும் பின்பு கயிலாயத்தை யடைந்து தவஞ் செய்து கொண்டிருந்தனர். அக்காலத்தில் விஷ்ணுதேவர் திருப்

பாற்கடல் கடைய மத்தாக மந்தரகிரி எடுத்த பாதாள வழியாக அனேக ராக்ஷதக் கூட்டங்கள் வெளிப்பட்டு உலகங்களில் பரவின தைக்கண்ட தேவர்களும், முனிவர்களும் பயந்து கயிலைக்கு வந்து முறையிட்டார்கள். அப்போது நாம் முன்பு உண்டாக்கின கோடி ருத்திரர்களைப் பார்த்து அசுரர்களால் நேரிடும் துன்பத்தை நிவர்த்தி செய்யுங்களென்று கட்டளையிட்டோம். அக்கோடி ருத்திரர்களும் பணிந்து சுவாமி! இப்போது அவர்கள் பாபகிர்த்தியங்களைச் செய்தாலும், பூர்வம் விசேஷ புண்ணியங்களைச்செய்து தவம்புரிந்தவர்களாதலால், அவர்களைக் கொல்லும் பாபம் தொடராதபடி அனுக்கிரகஞ் செய்யவேண்டுமென்று கேட்டார்கள். வேதகிரித்தலத்தில் நம்மை நீங்கள் பூசித்தால் பாபம் நிவர்த்தியென்று கட்டளையிட்டோம். இராட்சதர்களைத் துவம்ஸஞ் செய்து வேதகிரித் தலத்தையடைந்து பணிந்தார்கள். அவர்களுடைய அன்பிற்குவந்து கோடிலிங்கமாக உருக்கொண்டோம். அவ்விலிங்கங்களை அவர்கள் அர்ச்சனை செய்தபோது நாம் பிரசன்னமாய் நீங்கள் விரும்பியது யாதென்று வினவ, இன்று முதலாக இத்தலம் ருத்திரகோடித் தலமென்றும், தேவரீருக்கு ருத்திரகோடி நாதரென்றும் பெயர்வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி அனுக்கிரகித்து, அவர்களை நமது திருமேனியில் ஐக்கியஞ் செய்துகொண்டோம். அதுமுதல் ‡இத்தலம் ருத்திரகோடியென்று வழங்குகிறதென்று நந்திதேவருக்குச் சிவபெருமான் திருவாய் மலர்ந்தருளினர்.

நந்தி தவச் சுருக்கம்.

நந்தியம்பெருமான் சிவபெருமானிடம் அனுமதி பெற்றுக்கொண்டு வேதகிரித்தலத்தின் சிகரத்தைக்கண்டு மனங்கசிந்துருகி சிரம் வலது அஸ்தம் இடது அஸ்தம் வலது கன்னம் இடது கன்னம் முகவாய் வலது புஜம் இடது புஜம் என்னும் அஷ்டாங்கங்களும் பூமியிற்படிய நமஸ்கரித்து வேதகிரியைச் சேர்ந்து மேற்குத் திசையில் வேதகிரியின் சாயல் தோற்றும் ஒரு தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசித்து இடைபிங்கலையாகிய இரண்டு வழியை யடைந்து சுழுமுனைநாடி வழியைத்திறந்துஅவ்விடத்திற் காணப்படும் கோடிசூர்யப்பிரகாசத்தையுந் தரிசித்து தசவிதாத வொலிகளைக் கேட்டு லலாடஸ்தானத்தில் சந்திரமண்டலத்திலிருந்து பெருகுகின்றஅமிர்தத்தைப் பானஞ்செய்துபிரமமாநந்தபரராய் சிவயோகத்தில் எழுந்தருளியிருந்தனர். இவ்விதமாக நெடுங்காலந் தவஞ்செய்த நந்திதேவர் வைராக்கியத்தை வெளிப்படுத்தும்படி சிவபெருமான் தேவேந்திரனுக்குக் கட்டளையிட, இந்திரன்

---

‡இக் கோவில் சங்குதீர்த்தம் தென்கிழக்கு மூலையிலிருக்கிறது. இதுவே ஆதி க்ஷேத்திரம். சுவாமி பெயர்—உத்திரகோடீசுவரர். அம்மன் பெயர்—அபிராமி நாயகி.

திலோத்தமை முதலிய தேவகணிகையர்களைத் தவஞ்செய்யும்நந்திதேவ ரிடம் அனுப்பினன். அத்தேவதாசிகள் வேதகிரிதலத்திற் சேர்ந்து இடபரூபங்கொண்ட திருநந்திதேவரைக் கண்டு அதிசவுந்தரிய விசித் திர திருவுருவைப் பார்த்து பெருங்காதல் கொண்டு கிடாரி வடிவ மெடுத்தார்கள். நந்திதேவருடைய தேகத்தைத் தனது உடம்போடு உரைந்து காம சங்கல்பம் உண்டாகும்படி திலோத்தமை செய்ய, யோகத்தில் நின்றும் பிரிந்து பெருங்கோபத்தை அடக்கிக் கண்விழித் துப்பார்த்து திலோத்தமையே! உனக்கு இந்தக் கிடாரிவடிவம் நிலை பெறக் கடவதென்று சாபங் கொடுத்தனர். திலோத்தமை நடுநடுங்கி சுவாமி! அடியேன் செய்த அபராதத்தை மன்னித்தருளவேண்டும் என்று கதறி அழுது திருவடியில் வீழ்ந்தாள். நந்திதேவர் மனமிரங்கி கலியுகத்தில் மகாபலிபுரமென்னும் நகரத்திலிருந்து சுரகுருவென்னும் சூரியவமிசத்தரசன் வனத்தில் வேட்டையாடும்போது மாயீகன் என் னும் பன்றியின் மேல்விடும் பாணசேஷமானது உன்மேற்படும். நீ இறந்து திவ்விய சரீரத்தோடு சுவர்க்கமடையக் கடவாயென்று திரு வாய் மலர்ந்து யோகத்திலிருந்தனர். சாபமடைந்த திலோத்தமை பசுவடிவத்தோடு வனத்தில் மேய்ந்து அலைந்து திரிந்தனள். சிவபெ ருமான் திருநந்திதேவருக்கு அநுக்கிரகஞ் செய்யும்பொருட்டு நந்தி தேவர்முன் ஆகாச வீதியில் எழுந்தருளியதைக் கண்ட தேவர்கள் கற் பக பூமாரி பெய்தார்கள். நந்திதேவர் கண்விழித்துப் பணிந்து தோத்திரஞ் செய்து ஆனந்தக் கூத்தாடினர். சிவபெருமான் உன க்கு வேண்டிய வரம் கேளென்று திருவாய் மலர, எவராவது இத் தலத்தில்வந்து தேவரீரைப் பூசித்தால் அவர்கள் திருக் கயிலாயபதம் அடையும்படிக்கும், இத்தலத்திற்கு நந்திபுரியென்றும், தேவரீரெழுந் தருளிய வேதகிரிக்கு நந்திகிரியென்றும், நான் ஸ்நானஞ் செய்த தீர்த் தத்திற்கு ‡நந்தி தீர்த்தமென்றும், திருநாமம் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டபடி அனுக்கிரகித்தனர், இடப ரூபங்கொண்ட நந்தியம்பெருமான் சிவபிரானைத் தாங்கிக்கொண்டு வேதகிரிக் கெழுந் தருளினர்.

கங்காசலச் சுருக்கம்.

கங்கம் - கழுகு, அசலம் - மலை=கழுகு பூசிக்கும் மலை.

சரன்மலி நாட்டில் கிரேதாயுகத்திலே விருத்தசிரவா வென்கிற மகாமுனிவருடைய நெற்றியில் சண்டன் என்கிற முனிவரும் மார்பில் பிரசண்டன் என்கிற முனிவரும் கழுகு வடிவமாக அவதரித்தார்கள். அவர்களை பிதா பார்த்துச் சமஸ்த பட்சிகளுக்கும் அதிபதியாவீர்க ளென்றனர். அவர்களதை வெறுத்து வேதகிரிநாதரைப் பூசிக்கவேண்

‡கீழ் கோயிலுக்குள்ளே இருக்கிறது. அத்தீர்த்தக் கரையில் நந்திதேவர் ரிஷப உருவத்தோடு வடக்கு நோக்கி வேதகிரியைத் தரிசித்திருக்கக் காண லாம்.

டிய விதிகளைத் தெரிந்து வேதகிரிக்கு வந்து பூசித்து அந்த யுகமுடிவில் பெருமானேடு இரண்டறக் கலந்தனர்.

சம்பாதி சடாயு பூசித்த வரலாறு.

இரண்டாவது, திரேதாயுகத்தில் சம்பாதி சடாயுவென்னும் இரண்டு முனிவர்கள் பூர்வ வினையால் கழுகுவடிவமாகப் பிறந்தார்கள். சம்பாதி யென்பவர் தம்பியாகிய சடாயுவைப் பார்த்து உன்னிலும் நானே வலிமை யுடையேனென்றனர். தம்பி தமயனைப்பார்த்து உன்னிலும் நானே வலிமையுடையே னென்றனர். இவ்வண்ணம் இருவரும் வாதித்து, பின்பு நாம் இருவரும் சூரியமண்டலத்தை நோக்கிப் பறந்து செல்வோம், யார் முன்னே சூரியமண்டலத்தை யடைகின்றார்களோ அவர்களே பராக்கிரமத்தில் உயர்ந்தவர்களென்று தம்முள் நிச்சயித்து, முனிகணங்களைச் சாட்சியாக வைத்து, மேருபர்வத உன்னத சிகரத்திலிருந்து ஆகாயத்தை நோக்கி யிருவரும் ஒரேகாலத்தில் எழும்பிப் பறந்தார்கள். அதனால் அசுமுனிவர் சாபத்தை யடைந்து வேதகிரித் தலத்தைப் பூசித்து அந்த யுகமுடிவில் பெருமானேடு இரண்டறக் கலந்தனர்.

சம்புகுத்தன் மாகுத்தன் சரித்திரம்.

மூன்றாவது துவாபரயுகத்தில் சம்புகுத்தன் மாகுத்தன் என்னும் முனிவர்கள் வேதகிரியில் தவஞ்செய்தார்கள். தமயனாகிய சம்புகுத்தன் சிவமே பெரிதென்றான்; தம்பியாகிய மாகுத்தன் சத்தியே பெரிதென்றான். சிவமே பெரிதென்றவனை சிவபெருமானும், சத்தியே பெரிதென்றவனை திரிபுராம்பிகையும், கழுகாகச் சாபங்கொடுக்க, அத்தலத்தில் பூசித்து அந்த யுகமுடிவில் பெருமானேடு இறண்டறக் கலந்தனர்.

சம்பு ஆதி சரித்திரம்.

நான்காவது கலியுகாரம்பத்தில் பூடா விருத்தா வென்னும் இரண்டு முனிவர்கள் வேதகிரி தலத்தில் தவஞ்செய்தனர். அத்தவத்திற்கு வேதகிரிப்பெருமான் இரங்கிக் காட்சி கொடுத்து நீங்கள் செய்யுந் தவத்துக்கு நாம் மகிழ்ந்தனம். சாரூப பதத்தை இப்போது தருகின்றேம். ஒரு கற்பமட்டும் அச்சரீரத்தோடு திருக்கயிலாயத்தில் வாசஞ்செய்வீர்கள். அதன் பின்பு சாயுச்சியத்தைப் பெறுவீர்களென்று திருவாய் மலர்ந்தனர். அதைக்கேட்ட இரண்டு முனிவர்களும் இப்போதே சாயுச்சியந்தரவேண்டுமென்றனர். நாம் கட்டளையிட்ட வாக்கியத்தை மறுத்தமையால் நீங்கள் கழுகு வடிவங்கொள்வீர்களென்றனர். முனிவர்கள் பயந்து அபராதத்தைப் பொறுத்தருள வேண்டுமென்று பிரார்த்திக்க, நீங்கள் காசிபரிஷியினிடத்தில் இரண்டு கழுகுகளாகப் பிறந்து, சம்பு ஆதியென்னும் பெயர்பூண்டு இவ்வேதகிரிக்கு வந்து கிரியின்மீதுள்ள பாறையில் உங்கள் மூக்கினல் கீறுவீர்கள். அக்கீறல் சுனை வடிவமாகும். அத்தீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து பூசை

செய்யுங்கள். கலியுக முடிவில் முத்தியடைவீர்களென்று திருவாய் மலர்ந்தனர். அப்படியே காசிபமுனிவரிடத்தில் கழுகு வடிவமாகப் பிறந்து சம்பு ஆதியென்னும் பெயர்பூண்டு இப்போதுந் தவஞ்செய்து கொண்டிருக்கிறார்கள். இவ்வண்ணம் யுகங்கள்தோறும் இரண்டுபேர்களாக நான்கு யுகத்திற்கும் கழுகு வடிவங்கொண்ட எட்டு முனிவர்கள் பூசித்த காரணத்தால் அம்மலைக்குக் கழுகாசலமென்னும் பெயர் வழங்குகின்றது.

தீர்த்தச் சுருக்கம்.

மகாபலிபுரத்தை யரசாண்ட சுரகுரு சக்ரவர்த்தி இக்கழுகாசலத்துக்கு அருகிலுள்ள வனத்தில் வேட்டையாடினான். அந்த பாணத்தால் திலோத்தமை பசுவடிவம் நீங்கி பழைய உருவமாயினள். அவ்வரசனது வேட்டை நாய்களுக்குள் ஓர் நாய் குஷ்டநோய் கொண்டிருந்தது. அது வேதகிரியின் மேலேறி சுனையிலிருந்த தீர்த்தத்தைக் குடித்தபோது தவறி சுனைக்குள் வீழ்ந்தது. அத்தீர்த்தத்தின் மகிமையால் குஷ்டம் மாறி சுவர்ணகாந்தி யடைந்தது. குஷ்டமுள்ள மந்திரி அதைக்கண்டு அந்நாய் போனவழியே போய்ச் சுனையைப் பார்த்தபோது அத்தீர்த்தம் புழுக்களால் நிறைந்திருப்பது போலத் தோன்றியது. மனதில் அருவருத்து வாய்க்குள்ளே தீர்த்தம் போகாமல் ஸ்நானஞ் செய்தனன். சரீர முழுவதும் சுவர்ண காந்தியாய்ப் பிரகாசித்து, வாய்மட்டும் வெண்குஷ்டம் மாறாதிருந்தது. நான் தீர்த்தத்தை அருவருத்தேனாதலால் வாயில் குஷ்டம் நீங்கவில்லையென்று வாயில் தீர்த்தத்தைப் பருகினான். ஆதியில் சந்தேகித்தபடியால் வாயிலிருந்த வெண்குஷ்டம் மாறவில்லை. மந்திரி ஆச்சரியங்கொண்டு அரசனிடம் வந்து இந்த அற்புதத்தைத் தெரிவித்தனன். அம்மந்திரி முத்துமணிவெள்வாயனென்று யாவரும் சொன்னார்கள். பின்பு அரசன் மகாபலிபுரம் போகும்போது இப்போது கழுகு வடிவங்கொண்டு பூசிக்கும் முனிவர்கள் தடுத்து வேதகிரி ஸ்தலத்தின் தீர்த்த மகிமையைத் தெரிவிக்கின்றார்கள். ஆதியில் கங்கை முதலிய நதிகளெல்லாம் சமுத்திர ராஜனிடம் வந்தார்கள். வருணதேவன் கங்கையினிடத்தில் அதிக பிரியங்காட்டினான். மற்ற நதிதேவிகள் கண்டு ஊடல் கொண்டனர். கங்கை என் மகிமை உங்களுக்குக் கிடைக்குமோவென்று சொல்ல, ஒருவருக் கொருவர் விரோதித்து வாதஞ்செய்வதை சமுத்திர ராஜன் பார்த்து அவர்களை அழைத்துக்கொண்டு போய் கோதாவரி கோடீச்சுரருக்குத் தெரிவிக்க, அக்கடவுள் அந்நதிதேவிகளுடன் உருத்திரகோடி ஸ்தலத்திற்கு வந்து அங்குள்ள தீர்த்தங்களில் அவர்களை ஸ்நானஞ் செய்வித்தனர். ஸ்நானஞ் செய்தவுடன் தாங்கள்கொண்ட பொறாமை நீங்கி வேண்டிய வரம்பெற்று வாசஸ்தானத்தை யடைந்தார்கள். வருணதேவனும் வேண்டிய வரம் பெற்றுச் சென்றனர். இத்தலத்தில் அநேக தீர்த்தங்களுள்ளன. அவைகளில் முக்கியம் பன்னிரண்டு தீர்த்தமாகும். திருமலைக்குக்

கிழக்கே நால்வர் கோவில் சமீபம் இந்திர தீர்த்தம். அக்கினிமூலையில் ருத்திரகோவிலில் உள்ளது சம்பு தீர்த்தம். ருத்திரகோடி தீர்த்தம். மார்க்கண்டேய முனிவர் ஒவ்வொரு க்ஷேத்திர தரிசன யாத்திரை காலத்தில் கழுக்குன்றம் என்னும் திவ்விய க்ஷேத்திரத்தைத் தரிசிக்க தாம் சிஷ்ய கோடிகளுடன் வரும் சமயத்தில் சிஷ்யர்கள் பின்தங்கிட, பூசைபெட்டி முதலியன கையிலில்லாமல் மேற்கண்ட திவ்விய க்ஷேத்திரத்தை அடைந்து, வேதகிரிக்கு அருகிலுள்ளதீர்த்தத்தில் ஸ்நானஞ் செய்து பூசைசெய்ய, பூசைபெட்டி இல்லாததால் வருத்தம் அடைந்து கொண்டிருக்கும் சமயத்தில் அக்குளத்திற்கு மேற்குக் கரையில் ஒரு லிங்கமூர்த்தியைக்கண்டு ஆனந்தமடைந்து பூசைக்கு ஆரம்பிக்கும் தருணத்தில் அத்தீர்த்தத்தில் மிதந்துவந்த சங்கத்தைக் கண்டெடுத்து, சங்கத்திற்கு பிரதிஷ்டை முதலியன செய்து சங்கத்தால் பூசித்து பேரானந்தமடைந்து, அதுமுதல் இந்த க்ஷேத்திரத்திலேயே பிரதிதினமும் வாசஞ்செய்து பூசிப்பதையும், தேவதினமான 12 வருஷத்திற்கு ஒருமுறை சங்கம் உண்டாவதான பெருமைபொருந்தி வேதமலைக்கு தெற்கு வசிஷ்ட முனிவராலே தொழப்பட்டது சங்கு தீர்த்தம், நிருதி மூலையில் மெய்ஞ்ஞான தீர்த்தம், அசங்கவ தீர்த்தம், மார்க்கண்டேய தீர்த்தம், விஸ்வாமித்திர தீர்த்தம், திருமலைக்கு மேற்கில் நந்திதீர்த்தம், வருண தீர்த்தம், வடமேற்கில் அகலிகா தீர்த்தம், வேதகிரியின் பாறையின்மீது எங்கள் மூக்கினலே உண்டாக்கப்பட்ட சுனை சம்பாதி தீர்த்தம். இந்தத் தீர்த்தங்களில் ஸ்நானஞ் செய்தவர்கள் பாபம் நீங்கிப் பரிசுத்தராவார்கள். ஸ்தலம் சிவபுரமென்றும் தக்ஷிண கயிலாயமென்றும் வழங்கும். ஆதியில் சிவபெருமான் திருநந்திதேவரைப் பார்த்து கயிலாசகிரியின் சிகரங்களில் மூன்று சிகரங் கொண்டுபோய் மூன்றிடத்தில் வைப்பாயாக. அம்மூன்றில் ஒரு மலையைத் தரிசித்தாலும் நாம் எழுந்தருளியிருக்குங் கயிலாசத்தைத் தரிசித்த பலனடைவார்களென்று கட்டளையிட்டனர். நந்தியம்பெருமான் மூன்று சிகரங்களையும் கொண்டு மூன்றிடத்தில் நாட்டினர். வடக்கே மல்லிகார்ச்சுன புரம் ஒன்று. திருக்காளத்தி மலை ஒன்று, திருக்கழுக்குன்றம் ஒன்று. இத்தலத்திற்கு வருபவர் ஸ்நானஞ்செய்து நியாயமாகவந்து நந்திதீர்த்தத்தில் ஸ்நானம்செய்து ஸ்தலபுராணத்தை வாசித்துக் கொண்டாயினும், கேட்டுக்கொண்டாயினும் மேல்நடந்து வேதகிரியை ஐந்துதரமாயினும் மூன்றுதரமாயினும் பிரதக்ஷணஞ் செய்யவேண்டும். தீர்த்தக்கரை முதலான இடங்களில் தாம்பூலம் உமிழலாகாது. மற்ற அசுசிகளையும் செய்யலாகாது என்று கழுகு முனிவர்கள் சுரகுரு சக்ரவர்த்திக்குக் கூறினர். இதைக்கேட்ட இவ்வரசன் மேற்கூறிய தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து சிவாகம விதிப்படி வேதகிரீசரைப் பூசித்துத் துதித்தனன். வேதகிரிநாதர் கடாட்சத்தால் அவ்வரசன் செய்த தீவினைகளும் அநாதியாயுள்ள ஆணவமலமும் நீங்கி அநேகக் கருங்காக்கை வடிவங்கொண்டு அவன்

தலையினின்றும் உரோமத் துவாரத்தின் வழியாக வெளிப்பட்டு பேரிரைச்சலுடன் மேலெழும்பிப் பறந்து அவ்வேதமலைக்குத் தெற்கில் வீழ்ந்து ஓர் மலைவடிவமாயின. அம்மலைக்குக் காக்கைக்குன்றென்று பெயர் வழங்குகின்றது. அரசனும் மந்திரியும் ஸ்தலமகிமையை அனுபவமாகப் பார்த்து மலைவிட்டிறங்கி ஐந்துமுறை கிரிப்பிரதட்சணஞ் செய்து கோஹத்திப் பாபம் நீங்கும் வண்ணம் காடுகளை வெட்டிப் பூமியைத் திருத்தி நந்தி தீர்த்தத்திற்குப் படி கட்டுவித்துப் பக்தவத்ஸலேஸ்வர ரென்னும் ஓர் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து, ஆகம விதிப்படி உற்சவாதிகளை நடப்பித்துக் கழுகுமுனிவருடைய அனுக்கிரகத்தைப் பெற்று மகாபலிபுரத்தை யடைந்து சிலநாளிருந்து திருக்கயிலாயபதம் பெற்றனர்.

ஈஸ்வரனை அடைவது எப்படி?

திருக்கழுக்குன்றம்

மலைமருந்து, மூலிகை, பரிமள சாம்பிராணி

வத்திப் புகையை அதிகாலையில்

சாந்தமாக முகருவதுடன்

எட்டு - இரண்டையும்

முகர்ந்தால்

சீக்கிரமாக அடையலாம் ஈஸ்வரனை

திருக்கழுக்குன்றத்திலிருக்கும்படியான சத்திரங்கள்.

கவரை வீதி.

1. கற்பூரம்மாள் சத்திரம்.
2. ஆதிலட்சுமி அம்மாள் சத்திரம்.
3. பார்வதி அம்மாள் சத்திரம்.
4. அலமேலம்மாள், சுப்பராய செட்டியார் சத்திரம்.

அக்கிரார வீதி.

5. காளி தாயம்மாள் & ர. அங்கம்மாள்.
6. விஸ்வநாத செட்டி சத்திரம்.

அடிவாரம்.

7. வேதாத்திரிதாஸ் சத்திரங்கள்.
8. பார்த்தசாரதி முதலியார்.

சன்னதி.

9. இராஜகோபால் செட்டியார்.
10. இருசப்ப முதலியார்.
11. சோமசுந்தர முதலியார்.
12. காசி விஸ்வநாத முதலியார்.
13. திருவாடுதுறை மடம்.

செட்டி சந்து.

14. இரத்தின செட்டியார் சத்திரங்கள்.

சங்கு தீர்த்தம், வடவண்டை வீதி.

15. இரத்தின செட்டியார் சத்திரம்.
16. நாட்டுக்கோட்டையார் சத்திரங்கள்.
17. வீணைதீர்த்தார்க்கு மடம்.

கருங்குழி ரோட்டு வீதி.

18. வாணியர் மடம்.
19. செங்குந்தர் மடம்.

பெரிய வீதி.

20. பாலூர் இராஜம் செட்டி.

கம்மாளர் வீதி.

21. கம்மாளர் மடம்.
22. வன்னியாள் சத்திரங்கள்.

திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

"தோடுடையா னொருகாதிற் றூயகுழைதாழ
ஏடுடையான் தலைகலனாக விரந்துண்ணும்
நாடுடையான் நள்ளிருளே நடமாடும்
காடுடையான் காதல்செய்கோயில் கழுக்குன்றே."

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

"மூவிலைவேற்கையானை மூர்த்திதன்னை முதுபிணக்காடுடையானை முதலானானை, ஆவினிலைந் துகந்தானை யமரர்கோனை யாலாலமுண்டுகந்த வையன்றன்னைப், பூவினின்மே னான்முகனு மாலும்போற்றப் புணர்வரிய பெருமானைப் புனிதன்றன்னைக், காவலனைக் கழுக்குன்ற மமர்ந்தான்றன்னைக் கற்பகத்தைக் கண்ணாரக் கண்டேனானே."

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

"கொன்றுசெய்த கொடுமையாற் பலசொல்லவே
நின்றபாவ வினைகடாம் பலநீங்கவே
சென்றுசென்று தொழுமின் றேவர்பிரானிடங்
கன்றினோடு பிடிசூழ்தன் கழுக்குன்றமே."

திருச்சிற்றம்பலம்.

மாணிக்கவாசக சுவாமிகள் திருவாசகம்.

திருக்கழுக்குன்றத்துப் பதிக மூலமும்-உரையும்.

பிணக்கிலாத பெருந்துறைப்பெரு மானுன்னுமங்கள் பேசுவார்க்
கிணக்கிலாததோ ரின்பமேவருந் துன்பமேதுடைத் தெம்பிரான்
உணக்கிலாததோர் வித்துமேல்விளை யாமலென் வினையொத்தபின்
கணக்கில்லாத்திருக் கோலநீவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (க)

(ப-ரை) பிணக்கு இல்லாத-மாறுபாடில்லாத, பெருந்துறை-திருப்பெருந்துறையிலெழுந்தருளிய, பெருமான்-பெருமானாகிய, உன் நாமங்கள் - உன் திருநாமங்களை, பேசுவார்க்கு - சொல்லுவோர்க்கு, இணக்குஇல்லாதது-உவமை இல்லாததாகிய, ஓர்-ஒப்பற்ற, இன்பமே-ஆநந்த ரூபமே, வரும் துன்பம் துடைத்து-உண்டாகின்ற துன்பங்களை நீக்கி, எம்பிரான்-எம்பிரானே, உனக்கு இல்லாதது-கெடுதலில்லாததாகிய, ஓர் வித்து-ஒப்பற்ற பிறவி வித்தானது, மேல் விளையாமல்-இனி விளையாமல், என் வினை ஒத்தபின்-என் இருவினைகள் ஒத்த பின்பு, கணக்கு இல்லா-அளவில்லாத, திருக்கோலம்-திருக்கோலத்தை, நீ கழுக்குன்றிலே வந்து காட்டினாய்-நீ திருக்கழுக்குன்றிலே வந்து காட்டியருளினாய் (எ-று).

(க-ரை) திருப்பெருந்துறைப் பெருமானே, என் இருவினையொத்த பின்பு, திருக்கழுக்குன்றில், தன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய் என்பதாம்.

பிட்டுநேர்பட மண்சுமந்த பெருந்துறைப் பெரும்பித்தனே
சட்டநேர்பட வந்திலாத சழக்கனேனுனைச் சார்ந்திலேன்
சிட்டனேசிவ லோகனேசிறு நாயினுங்கடை யாயவெங்
கட்டனேனையு மாட்கொள்வான்வந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (௨)

(ப-ரை) பிட்டு நேர்பட-பிட்டினைப்பெற, மண் சுமந்த-மண்ணைச் சுமந்த, பெருந்துறை-திருப் பெருந்துறையி லெழுந்தருளிய, பெரும் பித்தனே-பெரும் பிச்சனே, சட்டம் நேர்பட வந்திலாத-உன் கட்டளைக்கிணங்க வந்திலாத, சழக்கனேன்-அறியாமையை யுடையேனாகிய நான் உன்னை சார்ந்திலேன்-உன்னை யடைந்திலேன், சிட்டனே பெரியோனே, சிவலோகனே-சிவபுரத்தையுடையவனே, சிறுநாயினும் கடை ஆய-சிறிய நாயினுங் கடைப்பட்ட, வெம்-குரூரமாகிய, கட்டனேனையும்-துன்பத்தை யுடையேனாகிய என்னையும், ஆட்கொள் வான்-அடிமை கொண் டருள, கழுக்குன்றிலே வந்து-திருக்கழுக் குன்றிலே யெழுந்தருளி, காட்டினாய்-உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய். (எ-று)

(க-ரை) பெருந்துறைப் பெருமானே, உன் கட்டளைக் கிணங்கி வராத என்னையும் ஆட்கொள்ளும்பொருட்டுத் திருக்கழுக்குன்றத் திலே உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய் என்பதாம்.

மலங்கினேன் கண்ணின்நீரைமாற்றி மலங்கெடுத்த பெருந்துறை
விலங்கினேன் வினைக்கேடனேனினி மேல்விளைவ தறிந்திலே
னிலங்கிநின்ற நின்சேவடிக ளிரண்டும் வைப்பிடமின்றியே
கலங்கினேன் கலங்காமலேவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (௩)

(ப-ரை) மலங்கினேன்-கலங்கினவனாகிய எனது, கண்ணில் நீரை மாற்றி-கண்ணீரைத் துடைத்து, மலம் கெடுத்த-என் மலங்களை அழித்த, பெருந்துறை-திருப்பெருந்துறையை, விலங்கினேன்-விட்டு விலகினேன், வினைக் கேடனேன்-வினையாகிய கெடுதியை யுடையேன், இனிமேல் விளைவது அறிந்திலேன் இனிமேல் உண்டாவது உணர்ந்திலேன், இலங்குகின்ற-விலங்குகின்ற, நின் சேவடிகளிரண்டும் உன் திருவடிகளிரண்டையும், வைப்பு இடம் இன்றி-வைத்தற்குரிய இடமில்லாமல், கலங்கினேன்-மனங் கலங்கினேன், கலங்காமல்-கலங்காவண்ணம், கழுக்குன்றிலே வந்து-திருக்கழுக்குன்றிலேவந்து, காட்டினாய்-உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய். (எ-று)

(க-ரை) பெருந்துறைப் பெருமானே, உன் மலத்தைக்கெடுத் தருளின திருப்பெருந்துறையை விலகி, இனிமேல் விளைவதையும் அறியாமல், உன் திருவடிகளை யமைக்க இடமின்றிக் கலங்கினேன். அவ்வாறு கலங்காமல் நீ திருக்கழுக்குன்றத்தில் வந்து உன் திருக் கோலத்தைக் காட்டி யருளினாய் என்பதாம்.

பூணொணாததொரன்புபூண்டு பொருந்திநாடொறும் போற்றவு
நாணொணாததொர் நாணமெய்தி நடுக்கடலுளழுந்திநான்

பேணுத பெருந்துறைப்பெருந் தோணிபற்றியுகைத்தலுங்
காணுத்திருக் கோலநீ வந்து காட்டினுய் கழுக்குன்றிலே. (ச)

(ப-ரை) பூணுதது-பிறர் செய்ய வொண்ணுததாகிய, ஓர்-ஒப்பற்ற, அன்பு பூண்டு-அன்பைப்பெற்று, நாள்தோறும் தினந் தோறும், பொருந்தி போற்றவும்-பொருந்தி வணங்குதற்கும், நான் ஒணுதது ஓர் நாணம்எய்தி நாணுததாகிய- ஒப்பற்ற நாணத்தை யடைந்து, (அதனுல்) நடுக்கடலுள்-(பிறவியாகிய) கடலின் நடுவே, நான் அழுந்தி-நான் முழுகி பேணுத-விரும்புதற்கரிய, பெருந் துறை-திருப்பெருந்துறையாகிய, பெரும் தோணி பற்றி பெரிய மரக் கலத்தைப் பிடித்து, உகைத்தலும்-செலுத்தலும், நீ கழுக்குன்றிலே வந்து-நீ திருக்கழுக்குன்றிலேவந்து, காணுத-காண வொண்ணுத, திருக்கோலம் காட்டினுய்-திருக்கோலத்தைக் காட்டியருளினுய்.(எ-று)

(க-ரை) பெருந்துறைப்பெருமானே, உன்னை யன்பு செய்து, வணங்க நானிப்பிறவிக்கடலி லழுந்திப் பெருந்துறை யென்கிற பெருந்தோணி பற்றிச் செலுத்தலும், நீ திருக்கழுக்குன்றில் வந்து உன் திருக்கோலத்தைக் காட்டியருளினுய் என்பதாம்,

கோலமேனி வராகமேகுண மாம்பொருந்துறைக் கொண்டலே
சீலமேது மறிந்திலாதவென் சிந்தைவைத்த சிகாமணி
ஞாலமே கரியாகநானுனை நச்சிநச்சிட வந்திடுங்
காலமேயுனை யோத நீ வந்து காட்டினுய் கழுக்குன்றிலே. (ரு)

(ப-ரை) கோலம் மேனி வராகமே-அழகாகிய திருமேனியை யுடைய மலையே, குணம் ஆம்-மங்கள குணங்களோடு கூடிய, பெருந் துறைக் கொண்டலே - திருப்பெருந்துறையிலுள்ள மேகமே, சீலம் ஏதும் அறிந்திலாத-நல்லொழுக்கம் சிறிது முணர்ந்திலாத, என் சிந் தை வைத்த - என் மனத்தை யமைத்தருளின சிகாமணி-சிரோ மணியே, ஞாலமே கரி ஆக-உலகத்தாரே சாட்சியாக நான் உன்னை நச்சி நச்சிட-நான் உன்னை மிகவும் விரும்ப, வந்திடும் காலமே நேரிடு கின்ற காலத்திலே, உன்னை ஓத-உன்னைத் துதிக்கும்படி, நீ கழுக் குன்றிலே வந்து, காட்டினுய்-உன் திருக்கோலத்தைக் காட்டி யருளி னுய் (எ-று)

(க-ரை) பெருந்துறைப் பெருமானே, நான் உன்னைத் துதிக்க, நீ திருக்கழிக்குன்றிலே உன் திருக்கோலத்தைக் காட்டியருளினுய் என்பதாம்.

பேதமில்லதோர் கற்பளித்த பெருந்துறைப் பெருவெள்ளமே
யேதமேபல பேசநீயெனை யேதிலார்முன் மென்செய்தாய்
சாதல்சாதல் பொல்லாமையற்ற தனிச்சரண் மாணுமெனக்
காதலாலுனை யோதநீவந்து காட்டினுய்க் கழுக்குன்றிலே. (சு)

(ப-ரை) பேதமில்லது-வேறுபாடில்லாததாகிய,ஓர் கற்பு அளித்த ஒப்பற்ற கல்வியைத் தந்த, பெருந்துறை- திருப்பெருந்துறையிலு

ள்ள,பெரு வெள்ளமே-பெருங்கடலே, ஏதம் பலபேச-குற்றங்கள் பலவற்றையும் எடுத்துப்பேச, ஏதிலார் முன்னம்-அயலார்க் கெதிரில், நீ என்னை என்செய்தாய்-நீ என்னை என் செய்தனை,சாதல் சாதல் பொல்லாமை அற்ற-இறத்தலென்கிற பொல்லாங்கில்லாத, தனி சரண்-ஒப்பற்ற உன் திருவடியே, சரண் ஆம் என-எனக்கு அடைக்கலமாகுமென்று, காதலால்-ஆசையோடு, உன்னை ஓத, உன்னை துதிக்க, நீ கழுக்குன்றிலே வந்து - நீ திருக்கழுக்குன்றிலே வந்து, காட்டினாய் - உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய். (எ-று.)

(க-ரை). பெருந்துறைப்பெருமானே, உன் திருவடியே யெனக்குப் புகலிடமாதலால் உன்னைத் துதிக்க, நீ திருக்கழுக்குன்றில் உன் திருக்கோலத்தைக் காட்டியருளினாய் என்பதாம்.

இயக்கிமா ரறுபத்துநால்வரை யெண்குணம் செய்தவீசனே
மயக்கமாயதோர் மும்மலப்பழ வல்வினைக்கு ளழுந்தவுந்
துயக்கறுத்தெனை யாண்டுகொண்டுநின் றாய்மலர்க் கழறந்தெனைக்
கயக்கவைத் தடியார்முனேவந்து காட்டினாய் கழுக்குன்றிலே. (எ)

(ப-ரை) இயக்கிமார்-இயக்கிமாராகிய, அறுபத்து நால்வரை-அறுபத்து நான்குபேரை, எண்குணம் செய்த ஈசனே-எண்குணங்களைப் பெறச்செய்த ஈசனே, மயக்கம் ஆயது-மயக்கத்தால் உண்டாவதாகிய ஓர் மும்மலம்-ஒப்பற்ற மும்மலத்தொடர்பாகிய, பழவல்வினைக்குள்-பழமையாகிய வலிய வினைக்கடலுள், அழுந்தவும்-நான் அழுந்தா நிற்கவும், துயக்கு அறுத்து-என் சேர்வை அறுத்து, என்னை ஆண்டுகொண்டு-என்னை ஆண்டுகொண்டருளிய, நின்-உனது, தூ-பரிசுத்தமாகிய, மலர்-தாமரைமலர்போன்ற, கழல்-திருவடியை, தந்து கொடுத்து, என்னை-அடியேனை, கயக்கவைத்து, அடியார் முன்னே-மெலியவைத்த, அடியார்களுக் கெதிரில், கழுக்குன்றிலே வந்து-திருக்கழுக்குன்றிலே வந்து, காட்டினாய்-உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய் (எ-று.)

(க-ரை) பெருந்துறைப் பெருமானே! மயக்கத்துக் கேதுவாகிய மும்மல வாசனையிலழுந்தா நிற்கவும், என் சோர்வைக் கெடுத்து எனக்கு உன் திருவடியைத்தந்து, அடியார்க்கெதிரில் எழுந்தருளித் திருக்கழுக்குன்றில உன் திருக்கோலத்தைக் காட்டி யருளினாய் என்பதாம்.

திருச்சிற்றம்பலம்.

பட்டினத்தடிகள்.

காடோ செடியோ கடற்புறமோ கனமே மிகுந்த
நாடோ நகரோ நகர்நடுவோ நலமே மிகுந்த
வீடோ புறந்திண்ணையோ தமியே னுடல் வீழுமிடம்
நீடோய் கழுக்குன்றி லீசா வுயிர்த்துணை நின்பதமே.

(இ-ள்.) நீள்தோய் கழுக்குன்றில் ஈசா-நீட்சிபொருந்திய திருக்கழுக்குன்றின்கண் எழுந்தருளிய கடவுளே, தமியேனுடல்விழுமிடம்-

தனியேனுடைய சரீரம் விழுகின்ற இடம், காடோ செடியோ கடற் புறமோ-காட்டிடமோ மரத்தடியோ சமுத்திரக்கரையோ, கனமே மிகுந்த நாடோ-சிறப்புப் பொருந்திய தேசமோ, நகரோ-ஊர்தானே, நகர்நடுவோ-ஊரினடுவிடமோ, நலமே மிகுந்த வீடோ-நன்மைமிகுந்த வீடோ, புறந்திண்ணையோ-வெளித்திண்ணையோ, (யான் அறியேன் ஆதலால் நின்பதமே உயிர்த்துணை-தேவரீருடைய திருவடிகளே என் உயிருக்குத் துணையாம். (எ-று.)

(க-ரை). திருக்கழுக்குன்றத்தில் எழுந்தருளிய ஈசனே தமியேனது சரீரம் விழுமிடம் காடுதானோ செடிதானோ கடற்கரையோ தேசமோ நகரமோ நகரினடுவிடமோ வீடோ வெளித்திண்ணையோ யானறிகிலேன். ஆதலால் தேவரீரது திருவடிகளே என்னுயிர்த் துணையாம். (எ-று).

அருணகிரிநாதர் திருப்புகழ்

அகத்தினைக் கொண் டிப்புவி மேல் சில
தினத்து மற்றென் றுற்றறி யாதுபின்
அவத்துள் வைக்குஞ் சித்தச னூடு கணையாலே
அசுத்த மைக்கண் கொட்புறு பாவையர்
நகைத் துறைக்கும் பொய்க்கடல் மூழ்கியே
அலக்க ணிற்சென் றுத்தடு மாறிய சிலநாள்போய்
இகத்தை மெய்க்கொண் டிப்புவி பாலர்பொன்
மயக்கி லுற்றம் பற்றை விடாதுட்
விளைப்பிரைப்பும் பித்தமு மாய்நரை முதிர்வாயே
எமக்க யிற்றின் சிக்கினி லாமுனுன்
மலர்ப்ப தத்தின் பத்தி விடாமன
திருக்கு நற்றெண் டார்க்கினி யாகவு னருள்தாராய்
புகழ்ச்சி லைக்கந் தர்ப்பனு மேபொடி
படச் சிறித்தண் முப்புறம் நீறுசெய்
புகைக்க னற்கண் பெற்றவர் காதலி யருள்பாலா
புவிக்குள் யுத்தம் புத்திரர் சேயர
சனைத்து முற்றுஞ் செற்றிட வேபகை
புகட்டி வைக்குஞ் சக்கரபாணிதன் மருகோனே
திகழ்க்க டப்பம் புட்பம் தார்புய
மறைத்து ருக்கொண் டற்புத மாகிய
தினைப்புனத்தின் புற்றுறை பாவையை யணைசீலா
செகத்தி லுச்சம் பெற்றமராவதி
யதற்கு மொப்பென் றுத்தழ கேசெறி
திருக் கழுக்குன் றத்தினில் மேவிய பெருமாளே.

ESTD. 1913.

PARIMALA & Co.,

SCIENTIFIC SCENTED STICK-MAKERS,
TIRUKALIKUNDRAM,
CHINGLEPUT Dist.

குகை பரிமள ஊழியன்

பரிமள வர்த்தி சாலை

திருக்கழுக்குன்றம்

மகிமைவாய்ந்த மலை மருந்தும், அநேக மூலிகையுடன்
சேர்ந்த சாம்பிராணி வர்த்தியும் விற்கப்படும்.

மலைமருந்து பரிமள வர்த்தியின் விபரம்.

பாம்பரை அநுபவம் சுமார் 75 வருஷம். ஸ்ரீ சாமண்டீஸ்வரி கிருபையால் அவதரித்த பறங்கிமலை குழந்தைவேல் பரதேசி அவர்கள் மூலியமாக அனுக்கிரகம் பெற்று, அனேக மூலிகைகளினுல் செய்த பரிமள வர்த்தியின் விபரம்.

இந்தப் புகையை அதிகாலையில் முகர்ந்தால் மூளையிலிருக்கும் படியான வியாதிகளைக் கண்டிப்பதுடன் சீதளத்தையும், பித்த மயக் கங்களையும் சீக்கிரம் கண்டிக்கும்.

பூஜை காரியத்திற்கும், யாகங்களுக்கும், யோகாப்பியாசங்களுக் கும், மற்ற இதர வியாதிகளை கண்டிப்பதற்கும் உதவுவதுடன், கார மும், வாசனையும் பொருந்திய புகையை வீணுக விடாமல்படிக்கு வாடையில் பரிமளத்தை கவனித்தால், ஸ்ரீ வேதகிரீஸ்வரருடைய கிருபையால், குணத்தைக் கொடுக்கும் ஞாபகசக்திக்கும் ஏதுவாகும். இந்த வர்த்தியைப்போல் பலரும் போட்டுக்கொண்டு திருட்டுத்தன மாக விற்கிறபடியால் அது பரிமள—வர்த்தியல்ல. ஆகையால் மோ சம் போகாதீர்கள். (விலாசம் சரியாக எழுதவும்.)

மலை மருந்து பரிமள தூப பில்லை.

இது பூஜைக்கும் தூபத்திற்கும் உதவும். 2 பலம் நல்லெண் ணெயை காயவைத்து, 6 பில்லையை போட்டுக் கலக்கினதும் மையாகி விடும். அந்த எண்ணெயை உச்சியில் மிதமான சுடுகையாக தேய்ப்ப துடன், உள்ளங்காலிலும் தேய்த்தால் பழமையான ஜன்னிகளையும், பித்த மயக்கங்களையும் மற்ற வியாதிகளையும் கண்டிக்கும் (ஆனுல் காலையில் ஸ்நானம் செய்யவும்,) தலை மயிருக்கும் புகையைக் காண் பித்தால் பரிமளமிருந்துகொண்டே யிருக்கும். சுண்டுகளையும் கண் டிக்கும். இத்துடன் தலை வலிக்கு புகையை முகர்ந்துவிட்டுடனே ½ மணி சக்வாசம் நித்திரை செய்தால் சீக்கிரம் கண்டிக்கும்.

அறைகளில் சுத்தமான நெருப்பினிடமாக பில்லையைப் போட்டு புகையை நிறையச் செய்தால், கொசுக்கள் அணுகாது, அறைகளும் பரிமளமாயிருக்கும்.

மேலே எழுதியவைகளை யெல்லாம் நேரில் கேட்டாலும் அல்லது லெட்டர் மூலியமாக தெரிவித்தாலும் உண்மையைச் சொல்ல காத்துக் கொண்டிருக்கிறோம்.

பரிமள தூப பில்லையைப்போல் அனேகர் விற்கிருர்கள். அது எங்களுடைய மருந்தல்ல. ஆகையால் ஜாக்கிரதையாக கவனித்து வாங்குங்கள்.

ஸ்ரீ வேதகிரீஸ்வராருக்கு ஹரோஹர:

திருச்சிற்றம்பலம்.

திருக்கழுக்குன்றம் மலைமருந்தோடு கூடிய பரிமள சாம்பிராணி வர்த்தியினுடைய விளம்பரம்

1. திருவிளக்கு வர்த்தி:—இது மாலையில் ஸ்திரீகள் திருவிளக்கு ஏற்றும்போதும் காலையில் சிறுவர்கள் புஷ்பம் கொய்யும்போதும் உடனுக முறையே கொளுத்திவைத்தும், கொளுத்திக் கையிற் பிடித்துக் கொண்டும், பகவந் நாமோச்சாரணஞ் செய்து வணங்க உபயோகப் படுவதற் குரியது. ஒரு வர்த்தி ½ மணி நேரம் எரியக்கூடியது. உத்திரவாத டிரேட்டு கழுகை கவனிக்கவும். பலம் 1-க்கு அணு 8.

2. பூஜா வர்த்தி :—இது பிரதானமாய் பூஜா காலங்களில் உபயோகித்தற்குரியது. 1 மணி சாவகாசத்திற்கு எரியக்கூடியது.
பலம் 1-க்கு விலை அணு 8.

3. அடிவார வர்த்தி :—இது தியானம் செய்வோருக்கும் பாராயணம் செய்வோருக்கும் உதவக்கூடியது. சாந்தமாக ஸ்ரீ வேதகிரீஸ்வரர் திருநாமத்தை உச்சரித்துக்கொண்டு ப்ரதக்ஷிணம் செய்யும்போது மிதமான காரமும் வாசனையும் பொருந்திய இந்த வர்த்திப் புகையை முகர்ந்துகொண்டு சென்றால் மனோலயத்திற்கும், இஷ்டசித்திக்கும் ஏதுவாகும். 2 மணி நேரம் எரியக்கூடியது.
பலம் 1-க்கு விலை அணு 8.

4. அர்ச்சனை வர்த்தி :—இது ஆலயங்களில் சுவாமிக்கு அபிஷேக காலங்களிலும், ஸத்காலக்ஷேப காலங்களிலும், முகூர்த்தாதி சுபகாரியம் நடைபெறுகிற காலங்களிலும் 6 மணி நேரம் வரையிலிருந்து 12 மணி நேரம் எரியும்படியான பலவித அளவினதாய், ஆர்டருக்குத் தக்கபடி கிடைக்கும். பலம் 1-க்கு அணு 8.

5. யோக வர்த்தி:—இது யோகாப்பியாச நிலைமைக்கு வேண்டிய பாங்காய், அதிக சுகந்தமாகவாவது, கஸ்தூரி அல்லது குங்குமப்பூ மிகவும் சேர்ந்ததாகவாவது அதிக காட்ட பரிமளத்துடன் ஆர்டருக்குத் தக்கபடி ½ மணி நேரத்திற்கு மேற்பட்டு 12 மணி நேரம் வரையில் எரியும்படியானது கிடைக்கும். பலம் 1-க்கு விலை அணு 12.

6. அசல் புனுகு :—இது திரிபுரசுந்தரி திலகத்திற்கும் மங்களகரமான காரியத்திற்குச் செல்லும்போது நெற்றியிலிட்டுக்கொண்டு போகவும் உதவும். நானுவித வாசனைகூட்டு வர்க்கத்திற்கும் வைத்திய விஷயங்களுக்கும் அனுகூலமானது (கண் கட்டிக்கும் உதவக்கூடியது) அசல் புனுகு (இது உண்மை.)

1 குண்டுமணி எடை அணு 2.

7. பரிமள தூப பில்லைகள் :—இது பூஜா காலத்தில் தூபத்திற்குதவும், சீதளமான வியாதிகளைக் கண்டிக்கும்.

பலம் 1-க்கு அணு 8.

8. இந்தக் கம்பெனியில் தருமத்திற்கு விஷக்கடிகளுக்கு மருந்து கொடுப்பதுடன், தாதுபுஷ்டிக்கு பச்சிலையும், மற்ற வியாதிகளுக்கும் மருந்து கொடுக்கப்படும். (ஒரு வேளை மருந்து 1¼ அணு)

9. வாசனை விபூதியும்: அசல் விபூதியும் ஆர்டர் பிரகாரமனுப்புகிறோம். கடை வியாபாரிகளுக்கும் கடை வர்த்திய மனுப்புகிறோம்.

10. தபால் மூலியமாக அனுப்புகிறோம். ஆனல் 2 ரூபாய்க்கு மேல்பட்டு ஆர்டர் கொடுக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறோம், அப்படிக் கொடுத்தால் பார்சல் ஸ்டாம்பு இனுமாக அனுப்புகிறோம்.

(வி. பி. மணியார்டர் கமிஷன் 2 அணு மாத்திரம் வாங்குகிறோம்.)

திருச்சிற்றம்பலம்.

முக்கிய அறிவிப்பு.

மலைமருந்து பரிமள வர்த்தி :—மேற்கூறிய பெருமான் விஷயம் நிற்க, நண்பர்கள் மேலே சொல்லிய வர்த்திகளை தேகாரோக்கிய நன்மைக்கு ஏதுவாகும்படி, பிரதி தினமும், அதிகாலை 3-மணியிலிருந்து 6-மணி பரியந்தமும், மாலை 6-மணியிலிருந்து 9-மணி பரியந்தமும் காற்று உலவாத அடக்கமான அறையினிடமாக வர்த்தியை ஏற்றி வைத்துவிட்டுப் புகையை ஆக்ராணிப்பாராக. சுகம் தெரிவதுடன் சகல காரியங்களுக்கும் உதவும். இத்துடன் மழை, பனி, வெயில், இந்தக் காலங்களுக்குத் தக்கவாறு பரிமளத்தைக் கண்டு பிடித்து நண்பர்களுக்குக் கொடுக்கப்படும். (பாகம் வித்தியாசம்)

இத்துடன் காலையில் பல முதைந்ததும், சாந்தமாக புகையை ஆக்கிராணித்தால் ஞாபகசக்திக்கு ரொம்பவு முதவுமென்று குரு வாக்கு இதை நம்பினவர்க்கு குணம்.

குகை பரிமள வரதராஜன் பரிமள அண்டு கம்பெனி,

திருக்கழுக்குன்றம் போஸ்டு,

செங்கல்பட்டு ஜில்லா.